# இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 16 வருடங்களுக்கு முன்னர் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது பல்கலைக்கழகத்தை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்ட பிரதான நிருவாகக் கட்டிடம், பராமரிப்புப் பிரிவுக் கட்டிடம், 33 உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் காணிகள் மற்றும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து பயன்படுத்தப்படுகின்ற பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் மாணவர் விடுதி வளவு, விவசாய விஞ்ஞான பீடத்தின் நாற்றுமேடைக் காணி மற்றும் மருத்துவ பீடத்திற்குரிய காணிகளையும் உள்ளடக்கிய 220 ஏக்கருக்கு மேற்பட்ட காணி மீளாய்வாண்டின் போதும் கையேற்கப்படாமையின் காரணமாக அவைகளின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தினால் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த வீடுகளின் வாடகைகளுக்காக எதிர்வரும் வருடங்களுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 423,766 தொகையான வீட்டு வாடகை நிதி நிலைமைக்கூற்றில் முற்கொடுப்பனவாகக் காண்பிக்கப்பட்டிராததுடன் அது மீளாய்வாண்டின் செலவினமாகக் காணப்பட்டது. அதன் காரணமாக செலவினம்

மற்றும் முற்கொடுப்பனவுகள் அப்பெறுமானத்தினால் முறையே அதிகரித்தும் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) விவசாய பீடம் பண்ணை கட்டம் II மற்றும் மருத்துவ மற்றும் விவசாய பீடங்களின் உள்ளக வீதி முறைமைகளை நிர்மாணிக்கும் ஒப்பந்தங்களுக்கு வேலை ஆரம்பிப்பு முற்பணங்களாக செலுத்தப்பட்ட ரூபா 2,469,500 கூட்டுப் பெறுமதியானது ஆண்டின் இறுதி வரையில் முழுமையாக அறவிடப்பட்டிருந்த போதிலும் அப் பெறுமதி இன்னும் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தமையினால் அக்கணக்கின் மீதி அப்பெறுமானத்தினால் அதிகமாகவும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைக் கணக்கு அப்பெறுமானத்தினால் குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) விவசாய பீடத்தினை விரிவாக்கும் செயற்பாடுகளுக்காக 15 ஏக்கர் அளவான காணியைக் கைப்பற்றுவதற்காக 2011 நவம்பர் 30 ஆந் திகதி மத்திய நுவரகம்பளாத பிரதேச செயலாளருக்கு வைப்புச் செய்யப்பட்ட ரூபா 7,200,000 தொகையானது பிரதேச செயலகத்தினால் காணியைக் கைப்பற்றும் முற்பணமாகக் காண்பிக்கப்படாமல் வேலை ஆரம்பிப்பு முற்பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) சிகிச்சைக் கட்டிடத்தின் விசேட செயற்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காக வழங்கப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் தீர்க்கப்படவேண்டியிருந்த மீதி ரூபா 12,634,645 ஆக இருந்த போதிலும் அது ரூபா 36,197,357 ஆக வேலை ஆரம்பிப்பு முற்பணமாகக் கணக்கில் காண்பிக்கப்பட்டமையினால் அக்கணக்கு ரூபா 23,562,712 தொகை அதிகமாகவும், நடைபெற்றுக்கொண்டிருக்கம் வேலைக் கணக்கு அப்பெறுமானத்தினால் குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஊ) சிகிச்சைக் கட்டிடத்தின் விசேட செயற்பாடுகளை நிறைவேற்றுவற்காக மீளாய்வாண்டின் போது பகுதிப்பட்டியல் மூலம் செலுத்தப்பட்ட பெறுமதி ரூபா 60,447,575 ஆக இருந்த போதிலும் கணக்கு அறிக்கையில் அது ரூபா 31,286,915 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் கணக்கு ரூபா 29,160,660 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2012 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி செலவினங்களுக்காக நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 07 மில்லியன் தொகையிலிருந்து மீளாய்வாண்டின் போது எச்செலவினமும் செய்யப்படாதிருந்த போதிலும் முழுத்தொகையுமான ரூபா 07 மில்லியன் வருமானச் செலவினக் கூற்றில் (நிதிசார் செயலாற்றல் கூற்றில்) வரவு வைக்கப்பட்டு ஆராய்ச்சிச் செலவினத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 17 சந்தர்ப்பங்களின் போது வைப்புச் செய்யப்பட்டு 03 மாதங்களுக்கும் 04 மாதங்களுக்குமிடையேயான வீச்சில் காலாவதியான நானாவித முற்பணம், சில்லறைக்காசு மற்றும் வழங்கல் முற்பணமாக ரூபா 1,945,708 கூட்டுத்தொகையான முற்பண மீதி 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 பெப்ரவரி 27 ஆந் திகதி விரிவுரையாளருக்கு வழங்கப்பட்ட ரூபா 25,000 தொகையான ஆராய்ச்சி முற்பண மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் விபரமான பட்டோலைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 2,587,986 தொகையான நிலையான சொத்துக்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டம் | |
| 99(i)(ஈ) பிரிவு | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான எந்த மூலங்களிலிருந்தேனும் பெறப்படுகின்ற சகல பணமும் பல்கலைக்கழக நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படுகின்ற வெளிவாரி ஆங்கிலப் பாடநெறி மற்றும் முகாமைத்துவ பட்டப்பின் பாடநெறிச் செலவினத்தைச் செய்ததன் பின்னர் மிகையில் 10 சதவீதம் உபவேந்தர் நிதியத்திலும் எஞ்சியவை பாடநெறி அபிவிருத்தி நிதியத்திலும் செலவு வைக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பந்தி | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் றம்பேவ மற்றும் மிஹிந்தலை பிரதேசங்களில் அமைந்துள்ள ஒரு குடும்பம் மற்றும் தனி அலகிலான வீட்டிற்கும் நீர்ப் பட்டியல் கட்டணம் ரூபா 510,925 தொகை பல்கலைக்கழகத்தினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதில் வசித்து வந்தவர்களிடமிருந்து ரூபா 73,128 தொகை மாத்திரம் அறவிடப்பட்ட காரணத்தினால் தனியார் நுகர்விற்காக பெறப்பட்ட நீருக்காக ரூபா 437,797 தொகை மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழக நிதியத்திலிருந்து செய்யப்பட்டிருந்தது. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

| | |
|---|---|
| நிதிப்பிரமாணம் 104(1), 104(3), 104(4) | 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது 06 சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழகத்தின் வாகனங்கள் விபத்திற்குள்ளாகியமையினால் ரூபா 872,927 கூட்டுத்தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 783,950 தொகை காப்புறுதி மேவுகையின் கீழும் ரூபா 88,977 தொகை பல்கலைக்கழகத்தின் நிதியத்திலிருந்தும் செய்யப்பட்டிருந்த போதிலும் விபத்துக்களுக்குப் பொறுப்பானவர்களை அடையாளங் காண்பதற்கான பரிசீலனைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) சுற்றுநிருபம்

| | | |
|---|---|---|
| (i) | 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க, 1994 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க மற்றும் 2002 பெப்ரவரி 25 ஆந் திகதிய 2002/01 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | குழாத்திலுள்ள வாகனங்களுக்கு அரசாங்க இலட்சனையும் நிறுவனத்தின் பெயர்களும் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 25 குழாம் வாகனங்களுக்கு அரசாங்க இலட்சனை அல்லது பல்கலைக்கழகத்தின் இலட்சனையும் நிறுவனத்தின் பெயர்களும் பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 (ii) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தான உத்தியோகத்தர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள மாதாந்த எரிபொருள் எல்லையினுள் தமது அலுவலகத் தேவைகளை நிறைவு செய்யவேண்டியதுடன் மேலதிக எரிபொருள் உரிய அமைச்சுச் செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் வழங்கப்பட முடியுமாக இருந்த போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி உபவேந்தரின் |

| | | |
|---|---|---|
| | | உத்தியோகபூர்வ வாகனத்திற்காக மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை விஞ்சி ரூபா 97,671 பெறுமதியான எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க மற்றும் 2009 யூன் 17 ஆந் திகதிய 9/2009(1) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | கடமைக்கான வருகை மற்றும் வெளிச் செல்கைகளைக் குறிப்பதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தினால் மீளாய்வண்டின் போது இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 2002 யூலை 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபம் | ஒப்பந்தக் கொடுப்பனவுடன் பெறுமதி சேர் வரி செலுத்தும் போது உரிய மாதத்தின் பின்னரான மாதத்தின் 15 ஆந் திகதியில் உள்ளவாறு அதன் வரித்தொகை கொடுப்பனவு விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் பூங்கா பராமரிப்பிற்காகச் செலுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி ரூபா 931,976 தொகை செலுத்தும் போது மேற்கூறப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 1997 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 720 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றுநிருபத்தின் 3(i) மற்றும் (ii) ஆம் பிரிவுகள் | பதில் கடமையின் ஆகக்கூடிய கால எல்லை 03 மாதங்களை விஞ்ச முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக 02 வருடங்கள் தொடக்கம் 05 வருட கால இடைவெளி வரை 10 உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 228,804 கூட்டுத்தொகையான பதில் கடமைப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. பிரதான பாதுகாப்பு |

உத்தியோகத்தர் மற்றும் நூலகர் பதவிகள் 2013 ஒக்தோபர் 11 ஆந் திகதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

### 1.2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

விடுதிக்காக மிஹிந்தலை பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பொலீஸ் விடுதிகளை கையேற்பதற்காக திறைசேரியினால் 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 18 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அக்கையேற்றல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்காக வழங்கப்பட்ட பணம் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் நிலையான வைப்பாக முதலீடு செய்து அதற்காகக் கிடைத்த ரூபா 9,243,577 தொகையான வட்டி திறைசேரி அங்கீகாரமின்றி ஒப்பந்தப்பட்டியல்களைத் தீர்த்தல் போன்ற வேறு செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் விளைந்த பற்றாக்குறை ரூபா 24,064,637 ஆக இருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 150,923,949 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 126,859,312 முன்னேற்றத்தைக் காட்டியது. இந் நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்காக மூலதன மானியங்களின் வழங்கல் ரூபா 176,257,079 இனால் அதிகரித்தமை மற்றும் மீண்டெழும் மானியங்களின் ரூபா 99,416,556 தொகை அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பல்கலைக்கழகத்தின் மீளாய்வாண்டிற்கான கல்விசார் செயலாற்ற பின்வருமாறு இருந்தது.

#### (அ) பரீட்சைப் பெறுபேறுகள்

2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற இறுதிப் பரீட்சை மற்றும் பட்டத்தைப் பூர்த்தி செய்தல் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| **விபரம்** | **பிரயோக விஞ்ஞான பீடம்** | **விவசாய பீடம்** | **முகாமைத்துவப் கற்கைப் பீடம்** | **சமூக விஞ்ஞான மற்றும் மனிதவள கல்விப் பீடம்** | **மருத்துவ மற்றும் இணையான விஞ்ஞான பீடம்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|
| மீளாய்வாண்டின் போது இறுதி ஆண்டுப் பரீட்சைகளில் தோற்றிய மாணாக்கரின் எண்ணிக்கை | 201 | 83 | 178 | 220 | 164 | 846 |
| சிறப்புச் சித்தியடைந்த மாணாக்கரின் எண்ணிக்கை | 78 | 52 | 05 | 139 | 67 | 341 |
| சாதாரண சித்தியடைந்த மாணாக்கரின் எண்ணிக்கை | 77 | 05 | 134 | 28 | 73 | 317 |
| சித்தியடைந்த | 155 | 57 | 139 | 167 | 140 | 658 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாணாக்கரின் மொத்த எண்ணிக்கை | | | | | | |
| சித்தியடையாத மாணாக்கரின் எண்ணிக்கை | 46 | 26 | 39 | 53 | 24 | 188 |
| பரீட்சைகளில் தோற்றிய மாணாக்கரின் எண்ணிக்கை பட்டத்தில் சித்தியடையாத மாணாக்கரின் எண்ணிக்கையின் சதவீதமாக | 22.8% | 31% | 21.9% | 24% | 14.6% | 22% |

மீளாய்வாண்டில் சகல பீடங்களிலும் இறுதி வருட பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணாக்கரின் எண்ணிக்கை 846 ஆக இருந்ததுடன் அதில் 188 மாணவர்கள் சித்தியடைந்திருக்கவில்லை. அது பரீட்சைகளில் தோற்றிய மாணாக்கரின் எண்ணிக்கையில் 22 சதவீதமாக இருந்தது.

(ii) 2007/2008 ஆம் ஆண்டு முதல் 2011/2012 ஆம் ஆண்டு வரை சேர்க்கப்பட்ட மற்றும் பட்டம் பெற்றவர்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சேர்க்கப்பட்டிருந்த மாணவர் எண்ணிக்கை | | | | | பட்டம் பெற்று வெளியேறிய மாணவர் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2007/ 2008 | 2008/ 2009 | 2009/ 2010 | 2010/ 2011 | 2011/ 2012 | 2007/ 2008 | 2008/ 2009 | 2009/ 2010 | 2010/ 2011 | 2011/ 2012 |
| மருத்துவ மற்றும் இணையான | 180 | 181 | 184 | 180 | 180 | - | - | - | - | 140 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விஞ்ஞான பீடம் | | | | | | | | | | |
| விவசாய பீடம் | 113 | 107 | 108 | 95 | 72 | 54 | 91 | 55 | 64 | 57 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 160 | 216 | 173 | 196 | 207 | 89 | 92 | 69 | 115 | 155 |
| சமூக விஞ்ஞான மற்றும் மனிதவள கல்விப் பீடம் | 225 | 275 | 337 | 330 | 302 | 154 | 114 | 181 | 188 | 167 |
| முகாமைத்துவப் கற்கைப் பீடம் | 211 | 279 | 307 | 276 | 355 | 162 | 201 | 163 | 137 | 139 |
| | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- |
| | 889 | 1058 | 1109 | 1077 | 1116 | 459 | 498 | 468 | 504 | 658 |
| | ==== | ==== | ==== | ==== | ==== | ==== | ==== | ==== | ==== | ==== |

விவசாய பீடத்திற்காகச் சேர்க்கப்பட்டிருந்த மாணவர் எண்ணிக்கை 2007/2008 ஆம் ஆண்டு முதல் 2011/2012 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக குறைந்து கொண்டு செல்லும் அளவில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) ஒரு மாணவனுக்கான கிரயம்**

மீளாய்வாண்டில் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடங்களினதும் மொத்தக் கிரயம் மற்றும் ஒரு மாணவனுக்கான கிரயம் என்பன கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | விவசாய பீடம் | பிரயோக விஞ்ஞான பீடம் | சமூக விஞ்ஞான மற்றும் மனிதவள கல்விப் பீடம் | முகாமைத் துவ பீடம் | மருத்துவ மற்றும் இணையான விஞ்ஞான பீடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | --------- | ------------- | -------- | ---------------- | ------------- | ------------- |
| மொத்தக் கிரயம்(ரூபா) | 64,782,503 | 69,847,426 | 47,179,677 | 49,035,443 | 113,659,617 | 344,504,666 |
| மொத்த மாணவர் எண்ணிக்கை | 402 | 816 | 1234 | 1189 | 1074 | 4715 |
| ஒரு மாணவனுக்கான | 161,551 | 85,597 | 38,233 | 41,241 | 105,828 | 73,066 |

கிரயம் (ரூபா)

விவசாய பீடத்தில் ஒரு மாணவருக்கான கிரயம் அதிக பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அதற்கு ஒப்பீடாக சமூக விஞ்ஞான மற்றும் மனிதவள கல்விப் பீடத்தில் ஒரு மாணவருக்கான கிரயம் மிகக் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தன.

**(இ) ஆராய்ச்சிச் செலவினம் மற்றும் ஆராய்ச்சிப் படிக் கொடுப்பனவு**

(i) 2012 ஆம் ஆண்டிற்காக ஆராய்ச்சிச் செலவினமாக நிதியேற்பாடு செய்யப்பட்ட தொகை ரூபா 07 மில்லியனாக இருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்குரிய ஆராய்ச்சிகளுக்கான ஆராய்ச்சிக் கடிதங்கள் 2013 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சிகளின் செயல்முன்னேற்றம் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி வழங்கல்களில் 26 கடிதங்கள் விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 22 பேர்களினால் ரூபா 1,254,550 தொகை 2012 ஆம் ஆண்டின் போதான முற்பணமாக வழங்கப்பட்டிருந்தன. ஆராய்ச்சிக் காலப்பகுதியில் 06 மாதங்களுக்கு ஒது தடவை வழங்கப்பட வேண்டிய செயல்முன்னேற்ற அறிக்கை இரண்டு விரிவுரையாளர்களினால் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2013 மே மாதம் வரையிலும் 2011 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சிகளுக்குரிய இறுதி அறிக்கை எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இரண்டு விரிவுரையாளர்களுக்கு முறையே 2008 பெப்ரவரி 27 ஆந் திகதி ரூபா 25,000 தொகையும், 2010 ஒக்தோபர் 06 ஆந் திகதி ரூபா 90,000 தொகையும் ஆராய்ச்சி முற்பணமாக வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய ஆராய்ச்சிகள் பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் பெற்ற முற்பணங்களை மீளத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஆராய்ச்சிக் கொடுப்பனவு தொடர்பாக 2011 ஏப்ரல் 07 ஆந் திகதிய 45 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 4(ஆ)

பந்தியின் பிரகாரம், ஆராய்ச்சி அறிக்கை சர்வதேச அல்லது தேசிய மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையாக வெளியிடப்படுதல் அல்லது உரிய தரப்பினர்களின் கலந்துரையாடலுக்கு (Symposium) சமர்ப்பிக்கப்பட்டு ஆராய்ச்சிக்குழு திருப்திப்படுதல் மீது மாத்திரமே தொடர்ந்தும் ஆராய்ச்சிக் கொடுப்பனவுகளைச் செய்யமுடியும். எனினும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய எந்த ஆராய்ச்சிகளினதும் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்தமையால் ஆராய்ச்சிக் கொடுப்பனவு தொடர்பான தீர்மானம் அல்லது இடைநிறுத்தல்கள் தொடர்பான தீர்மானம் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவினால் (Senate Reseach, Publication and Higher degrees Committee-SRPHDC) எடுக்கப்பட்டிருக்ககவில்லை. மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ஆராய்ச்சிப் படிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,093,477 ஆக இருந்தது.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

மீளாய்வாண்டின் போது மாணவர் விடுதிக்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்ட 32 வீடுகளுக்காக மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மாதாந்த வாடகை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 19 வீடுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 3,786,000 தொகையான வாடகையை விட 150 சதவீதம் தொடக்கம் 200 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 5,826,000 கூட்டுத்தொகையான அதிகரித்த தொகையில் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தமையினால் 19 வீடுகளுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு வாடகையை விட ரூபா 2,040,000 மேலதிக வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் முழுச் சம்பளத்துடன் கூடிய கற்கை விடுமுறை பெற்றுக்கொள்ளும் பத்திரத்தின் 09 ஆவது பிரிவின் பிரகாரம் சம்பளத்துடனான கற்கை விடுமுறை முடிவடைந்ததும் கடமைக்கு அறிக்கையிடாவிட்டால் அத்திகதி தொடக்கம் ஒரு வருடகாலத்திற்குள் ஒப்பந்தப் பெறுமதியைச் செலுத்துவதற்கும் அவ்வாறு ஒரு வருட காலத்தில் செலுத்த முடியாதாயின் 12 சதவீத வருடாந்த வட்டியுடன் செலுத்த வேண்டியிருந்தமையும் உரிய உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. பிரயோக விஞ்ஞான பீடத்தில்

உடன்படிக்கைகளை மீறிய பயிலுனர் விரிவுரையாளர்களுக்கு உடன்படிக்கையை மீறிய 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் ரூபா 1,631,991 தொகையான உடன்படிக்கைப் பெறுமதி மற்றும் ரூபா 405,118 தொகையான அதற்குரிய வட்டிப் பெறுமதியையும் அறவீடு செய்வதற்கு எவ்வித சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

வருடாந்தக் கிரயம் ரூபா 13 மில்லியனை விஞ்சுகின்ற பல்கலைக்கழகத்தின் பூங்காவினைப் பராமரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கொள்வனவு நடைமுறைகளின் போது கேள்வி ஆவணங்களில் கேள்விதாரர்கள் எவருக்கும் அடைய முடியாத பின்வரும் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

“அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம் அல்லது நியதிச்சட்ட சபைகள் அல்லது தனியார் நிறுவனங்களுக்காக 25 ஏக்கருக்கு மேற்பட்ட பூங்காவினை பராமரிக்கும் சேவை திருப்திகரமாக வழங்குதல் தொடர்பாக 2005 - 2011 வருட காலப்பகுதியை உள்ளடக்கும் வகையில் 03 வருட அனுபவமுள்ள நிறுவனமாக இருத்தல்.” இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறைவுசெய்ய முடியாத மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் பூங்காவினைப் பராமரிக்கும் நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டில் அல்லது அதற்கு முன்னைய வருடங்களின் போது காணப்பட்ட சகல கேள்வி கோரல்களின் போதும் கிடைத்த கேள்விகளில் உரிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த எந்த கேள்விதாரரும் முன்வந்திருக்கவில்லை.

(ஆ) கேள்வி மதிப்பீட்டின் போது ஏனைய தேவையான அனைத்துத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்த ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரரின் கேள்வி 25 ஏக்கருக்கு மேற்பட்ட பூங்கா பராமரிப்பு தொடர்பான அனுபவம் இல்லாதிருந்தமை காண்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் இரண்டாவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரரும் அந்நிபந்தனைகளை நிறைவேற்றாதிருந்த போதும் அப் பல்கலைக்கழகத்தின் அச்செயற்பாடுகள் தொடர்பாக முன் அனுபவத்தின் அடிப்படையில் ஒப்பந்தம் அந்நிறுவனத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்தது. ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரரின் கேள்வி நிராகரிக்கப்பட்ட காரணத்தினால்

கொடுப்பனவு செய்யும் போது 2012 மே தொடக்கம் 2013 சனவரி வரையான காலப்பகுதியில் ரூபா 1,708,064 தொகை நட்டம் பல்கலைக்கழக நிதியத்திற்கு ஏற்பட்டிருந்தது.

(இ) பூங்காவினைப் பராமரிக்கும் செயற்பாடுகளில் கொள்வனவுச் செயற்பாடுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட மொத்த கிரய மதிப்பீடு பின்வரும் பிழையான பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதன் காரணமாக அந்த கேள்வி மதிப்பீட்டிற்கான ஈடுபடுத்தல்கள் பயனுறுதி வாய்ந்ததாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) மதிப்பீட்டைத் தயாரிப்பதற்காக கூறுவிலைகள் பெறப்பட்ட மூலங்களான மாவட்ட விலைத் தீர்மானக் குழு மொத்த மாவட்டத்திற்காகவும் ஒரே விலை தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மதிப்பீட்டின் ஒரு வேலை விபரத்திற்காக பல்வேறு இடங்களிலும் பல்வேறு கூறுவிலைகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

| **மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட இடம்** | **01 ஹெக்டேயருக்காக காய்ந்த மரங்களையும் இலைகளையும் வெட்டுவதற்காகச் செலுத்தப்படும் தொகை** |
|---|---|
| | **ரூபா** |
| மிஹிந்தலைப் பிரதேசம் | 8,029 |
| மிஹிந்தலை விளையாட்டரங்கு | 18,927 |
| விவசாய பீடம் | 65,833 |
| வைத்திய பீடம் | 29,200 |

(ii) மொத்தக் கிரய மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட விலைப் பகுப்பாய்வின் பிரகாரம் (Rate Analysis) சகல விடயங்களுக்கும் உரியதாகச் சேர்க்கப்பட்ட இலாபம் மற்றும் பொதுச் செயற்பாட்டுக் கிரய விகிதம் 20 சதவீதமாக இருந்த போதிலும் இந்த மதிப்பீட்டிற்காக 35 சதவீத இலாபம் மற்றும் பொதுச் செயற்பாட்டு விகிதாசாரம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**3.5 பதவியணியினர் நிருவாகம்**

(அ) மீளாய்வாண்டின் போது கீழே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் கல்விசார் பதவியணியினரில் 117 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

**கல்விசார் பதவியணியினர்**

| | **பதவி** | **அங்கீகரிக்கப்பட்டது** | **உள்ளவாறானது** | **வெற்றிடம்** |
|---|---|---|---|---|
| (i) | பேராசிரியர் | 28 | 04 | 24 |
| (ii) | விரிவுரையாளர்/ அமைய விரிவுரையாளர் | 253 | 160 | 93 |
| | | 281 | 164 | 117 |

(ஆ) கல்விசார் பதவியணியினரில் காணப்பட்ட 117 வெற்றிடங்களுக்கு மேலதிகமாக 23 விரிவுரையாளர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலமைப்பரிசில்களுக்காக கற்கை விடுமுறை பெற்று மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்திலிருந்து வெளிச் சென்றிருந்தனர். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கல்விசார் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்த முடியாதிருந்த கல்விசார் பதவியணியினரின் எண்ணிக்கை 139 ஆக இருந்ததுடன் அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் சதவீதமாகக் கொள்ளும் போது 49 சதவீதமாக இருந்தது. கல்விசார் பதவியணியினரில் காணப்பட்ட அதிகமான வெற்றிடங்களின் காரணமாக மீளாய்வாண்டின் போது வெளி விரிவுரையாளாகளுக்கு விரிவுரைக் கட்டணமாக ரூபா 7,412,798 தொகை செலுத்தி அச்சேவை பெறப்பட்டிருந்தது.

**கல்விசாரா பதவியணியினர்**

| | பதவி | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| (i) | பதவிநிலை | 28 | 20 | 08 |
| (ii) | பதவிநிலையற்ற | 394 | 330 | 64 |
| | | 422 | 350 | 72 |

(இ) கல்விசாரா பதவியணியினரில் கணனி செயற்படுத்துனர் உதவியாளர் தரம் III இற்கு மீளாய்வாண்டின் போது 11 பேர் சேர்க்கப்பட்டிருந்ததுடன் இப் பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் 2004 திசெம்பர் 14 ஆந் திகதிய 854 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு முரணாக உயர் கல்வி அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட 53 விண்ணப்பதாரிகளினது பெயர்ப்பட்டோலையை அடிப்படையாகக் கொண்டு உரிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. உரிய 53 விண்ணப்பதாரிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட முறை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

(அ) மதிய காப்பகம் நிலையக் கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 8,226,250 கிரயம் செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் யூலை மாதத்தின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2013 செப்தெம்பர் 11 ஆந் திகதி வரையிலும் எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) மிஹிந்தலை அரசாங்க வங்கிக் கிளையில் பேணப்பட்டு வருகின்ற கணக்கில் ரூபா 113,061 தொகையான மீதி 02 வருட காலத்திலிருந்து செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 3.7 வாகனங்களின் குறைவான பயன்பாடு

பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான குழாம் வாகனத்திலுள்ள 03 வாகனங்கள் பழுது பார்க்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் 04 குழாம் வாகனங்கள் பீடாதிகளின் கடமைகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. அந்த வாகனங்களை ஆகக் கூடிய செயற்திறனுடன் நிறுவனத்தின் செயற்பாடுகளில் ஈடுபடுத்த முடியாமையினால் மீளாய்வாண்டின் போது வாடகை அடிப்படையில் 02 வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டு ரூபா 846,177 தொகை பல்கலைக்கழக நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கு முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடுகின்ற போது உரிய ஒப்பந்த உடன்படிக்கைகளுக்காக பயன்படுத்த வேண்டிய உடன்படிக்கை மாதிரிப் படிவங்களை கொள்வனவு முகவர் நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்ட இக்டாட் நிறுவனத்தினால் பிரசுரிக்கப்பட்ட (ICTAD Publication Standard Bidding documents) படிவங்களை உடன்படிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாமல் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற 02 சேவைகளுக்காக உடன்படிக்கை தயாரிக்கப்பட்டமைக்காக தனியார் சட்டத்தரணிக்கு ரூபா 30,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட 09 உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களில் 03 இற்காக முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரான உதவி உள்ளகக் கணக்காய்வாளர் உட்பட மூன்று பேர் இருந்ததுடன் மீளாய்வாண்டில் கணக்காய்வு எழுதுவினைஞர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

## 4.2 வருடாந்த அறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2011 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை 2013 ஏப்ரல் 29 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அனுப்பப்பட்டிருந்தது.

## 4.3 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புக்கள்

(அ) 2011 சனவரி 04 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| கட்டளை இல. | வழங்கப்பட்ட கட்டளை | தற்போதைய நிலை |
|---|---|---|
| 07 | பல்வேறு பாடநெறிகளில் கிடைத்த பணத்தை பல்கலைக்கழக நிதியத்தில் செலவு வைத்தல் | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிலும் பல்வேறு வெளிவாரிப் பாடநெறிகளிலிருந்து கிடைத்த ரூபா 27,970,984 தொகையானது பல்கலைக் கழகத்தின் நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| 08 | மிஹிந்தலை பல்கலைக்கழக சுற்றாடலில் காணப்பட்ட பொலீஸ் விடுதியை பல்கலைக்கழகத்தின் விடுதிக்காக கையேற்கும் வரை திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 18 மில்லியன் தொகை திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டு நிலையான வைப்பு கணக்கில் முதலீடு செய்தல் | 2012 ஒக்தோபர் வரும் வரையில் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அந்நிதி பல்வேறு கொடுப்பனவுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |
| 14. | உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகைக் கட்டணம் மற்றும் மின்சாரப் பட்டியல் கட்டணங்களை வதிவாளர் களிடமிருந்து அறவீடு செய்வதற்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான ஒரு அலகு மற்றும் குடும்ப அலகு வீடுகளின் நீர்க்கட்டணப் பட்டியல்களுக்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 896,613 தொகையும் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 437,797 |

தொகையும் பல்கலைக்கழக நிதியத்திலிருந்து செலுத்தப் பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக் கட்டுபாடு
(ஆ) ஒப்பந்தக் கட்டுப்பாடு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) மனித வள முகாமைத்துவம்
(உ) வாகனக் கட்டுப்பாடு